**சார்பு நீதிமன்றம், சீர்காழி.**

**அசல் வழக்கு எண்.132/2022**

2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 29 ம் நாள் வெள்ளிக் கிழமை (DW4) -இன் வாக்குமூலம், 1873 ஆம் ஆண்டு இந்தியசாட்சியசட்டப் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திருமதி. S.மும்தாஜ், B.Sc.,B.L., சார்பு நீதிபதி, சீர்காழி அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு, பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 29.08.2025 | தந்தை/கணவர் பெயர்: | |
| பெயர்: | முருகன் (DW4) | தாலுக்கா: | |
| கிராமம்: | | வயது | |

<u>சாட்சி நீதிமன்றம் மூலம் அழைப்பாணையின் பேரில் அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு முதல் விசாரணை</u>

எனக்கு நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்ததன் அடிப்படையில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். தற்போது நான் தரங்கம்பாடி தாலுக்கா நரசிங்கநத்தம் கிராம நிர்வாக அலுவலராக பணியாற்றுகிறேன். கிராம கணக்கு தொடர்பான பதிவேடுகளை எடுத்து வந்துள்ளேன். என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணங்கள் எனக்கு முன்பு இருந்த கிராம நிர்வாக அலுவலர்களால் வழங்கப்பட்ட அடங்கல் கணக்கு சிட்டா நகல்கள் ஆகும். ( வட்டாட்சியரிடம் உரிய மேலெழுத்து கையொப்பம் பெறப்பட்டவில்லை மற்றும் நீதிமன்ற முத்திரை இல்லை மற்றும் சாட்சியால் வழங்கப்படவில்லை என்ற ஆட்சேபணையுடன் பி.வா.சா.ஆ. 10 ( வரிசை ) ஆக குறியிடுசெய்யப்படுகிறது ). **தற்போது தாக்கல் செய்யயும் அழைப்பாணையில் குறிப்பிடும் அடங்கல் மற்றும் சிட்டா முறையே சா.சா.ஆ. 1, 2 ஆக குறியிடுசெய்யப்படுகிறது**

<u>குறுக்குவிசாரணை</u>

நான் 2019 ம் ஆண்டு மார்ச் 15 முதல் 2021 ஜுன் வரையிலும் தற்போது 2023 ஜுலை வரை நரசிங்கநத்தத்தில் பணியாற்றி வருகிறேன். பி.வா.சா.ஆ. 10 குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சாகுபடியின் அடிப்படையில் வழங்கி உள்ளேன். பி.வா.சா.ஆ. 10 ஆவணத்தில் முதல் ஆவணம் நான்வழங்கியது. என்னால் வழங்கப்பட்டாத அதில் உள்ள வருவாய் ஆவணங்கள் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால்சரிதான். முதல் ஆவணம் யார் பெயரில் பட்டா

உள்ளது என்பது குறித்து தெரிந்துக் கொண்டேனா என்றால் பட்டா அடங்கல் பதிவேட்டை பார்த்து வழங்கியுள்ளோம். பட்டா யார் பெயரில் உள்ளது என்றால் முத்துபடையாச்சி, முத்து உதையம்மாள் பெயர்களில் பட்டா உள்ளது. முத்துபடையாச்சி, முத்து உதையம்மாள் தவிர ராஜாமணி பெயரில் சிட்டா அடங்கல் உள்ளது. ராஜமணி தொடர்பான புல எண்களுக்கான ஆவணங்களை எடுத்துவருமாறு குறிப்பிடவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ. 10 பெரும்பாலான புல எண்கள் தாவா சொத்துக்கு தொடர்பில்லாதவை என்றால் அது குறித்து தெரியவில்லை. என்னுடைய அழைப்பாணையில் தாவா சொத்து 15 அயிட்ட புல எண்களின் தொடர்புடைய வருவாய் ஆவணங்களை எடுத்து வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது. சா.சா.ஆ. 2 பட்டா எண். 205 சின்ன தம்பி மகன் தங்கராசு என்றுள்ளது என்றால் சரிதான். அவருடைய பாலகிருஷ்ணன் சாகுபடி செய்வதால் தங்கராசு பெயரில் உள்ளது. சா.சாஆ. 2 வழக்கு சொத்துக்கு சம்பந்தம் இல்லாத நபர்களின் பெயரில் உ ள்ளது என்றால் சரியல்ல. சா.சாஆ.1 ல் அழைப்பாணையில் குறிப்பிடாத புல எண்கள் குறித்து அமைந்துள்ளது என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ. 10 நான் வழங்காத ஆவணம் என்பதால் அது கு றித்து சாட்சியம் அளிக்க இயலாது என்றால்சரியல்ல. அதுபோல் சா.சா.ஆ. 1, 2 அழைப்பாணையில் குறிப்பிடாத புல எண்கள் குறித்தும் நான் சாட்சியம் அளிக்க இயலாது என்றால் சரியல்ல. சத்தியமூர்த்தி, கல்யாணசுந்தரம் பெயரில் அழைப்பாணையில் குறிப்பிட்ட புல எண்களுக்கு பட்டா இல்லை என்றால் அது குறித்து தெரியவில்லை. பி.வா.சா.ஆ. 10 எதன் அடிப்படையில் 2, 3 பிரதிவாதிகள் பெயரில் எந்த ஆவணத்தின் அடிப்படையில் எதற்காக வழங்கப்பட்டது என்பது எனக்கு நேடிரயாக தெரியாது என்றால் சரிதான்.